Nar-kulasekari caridai Part II

உ

கடவுள் துணை.

நல்லதங்காள் சரித்திரம்.

இரண்டாம்பாகம்.

1.4OCT 1924

சென்னை;

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

]இதன்விலை 1924. [அணா—4.

ரிஜிஸ்டர் காபிரைட்.

-,592 N
N29
81067

உ

முருகன் துணை.

டி. ஜி. ஜெகநாதநாயுடு, டி. என். சுந்தர ராவ்,
டி. எ. இராஜாமணி, ஜெகன் மோகன
குப்புசாமி முதலியார் முதலிய
நாடககம்பெனியார்களால்
பாடி ஆடிவருகிற

நற்குலசேகரியென்னும்

நல்லதங்காள் சரித்திரம்.

இரண்டாம்பாகம்.

இஃது,
மதுரை ட்ராமா உபாத்தியாயர்
ம-ா-ா-ஸ்ரீ,

மு. திருமலை முத்துப்பிள்ளை

அவர்களாலியற்றிதை,

சென்னை:

பி. நா. சிதம்பரமுதலியார்
அண்டு பிரதர்ஸ் அவர்களது
சென்னை
வித்தியாரத்நாகா அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1924.

இதன்விலை அணா 4.

14 OCT 1924
894.8113
32,00

அநுபவமானது!   பிரசித்தியடைந்தது!!   சஞ்சீவிபோன்றது!!

அயக்காந்த திராவகம்.

மித்திரர்களே! இந்த அபூர்வமருந்தானது அநேக கொடியவியாதிகளை ஆச்சரியமாய் கண்டிக்கக்கூடியது. இதை அனேக ஆயிரங்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது கெட்ட சகவாசத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிர்த்திதருவதில் இது நிகரற்ற மருந்தாகும் ஆங்கிலேயமுறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையானமருந்து சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமலநோய்கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டேவேளையில் ஆச்சரியமான சுகத்தையடைவார்கள். இதனால் தீரக்கூடிய அநேகவியாதிகளில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.

நரைத்தமயிரைக் கறுப்பாக்கும். உஷ்ணத்தினாலாவது புழுவெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும். நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல் கைகால் காந்தல் இவை தீரும் முகவசீகரத்தை உண்டாக்கும், தேகஅசதியைபோட்டும் ஜீரணசக்தியையும் நல்ல பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும். நரம்புகளுக்கு அதிகவலுவைத்தரும், தேகத்தில்நல்ல இரத்தைச் சுரப்பிக்கும். க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும், வாதபித்த சிலேத்துமத்தாலுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும் சத்ததாதுகளுக்கும் நல்ல பலத்தைத்தரும். மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் இவைதீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 20-நாள் சாப்பிட்டால்இணையில்லாத ஆனந்தத்தைத்தரும். இழந்துபோன தேகதிடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறுமருந்தே கிடையாது. 40-நாள் மருந்து உட்கொள்ளும் பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதன் நிழலைக்கூட அணுகாது. தேகம் வஜ்ஜிரமேயாகும். இதற்கு யாதொரு பத்தியமுங் கிடையாது.

இந்த திராவகத்தை உட்கொள்ளவேண்டிய முறை.

அரிக்கால் ஆழாக்கு சுத்தஜலத்தில் திராவகத்தை 5-துளி அல்லது 7-துளி அதில்விட்டுக் கலக்கிக்குடித்து விடவேண்டும். பத்தியமே கிடையாது இதைப்பற்றிய விவரங்கள் பார்சலோடு வைத்துவரும்.

அரைமண்டலம் 20-நாளைக்கு வரக்கூடிய ஒருபுட்டியின்விலை
ரூபா 1 4 0   டஜன் 1-க்கு ரூபா—12

ஒரு மண்டலம் 40-நாளைக்கு வரக்கூடிய ஒருபுட்டியின் விலை
ரூபா 2 0 0   டஜன் 1-க்கு ரூபா—21.

இப்படிக்கு,
பி. [illegible] சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்,
பெரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.

18067

உ

கடவுள் துணை

நற்குலசேகரியென்னும்

நல்லதங்காள் சரித்திரம்.

இரண்டாம்பாகம்.

விநாயகர் துதி.

வெண்பா.

சீர்த்தி மிகுந்தகுல சேகரியாம் நல்லதங்கை
நேர்த்தி மிகுங்கதை நிகழ்த்தலதற்குக்—சீர்த்தியது
தேங்கல் குழல்புத்தி சித்திவிநாயகனும்
ஓங்கல் முகத்தனடி யுன்.

நல்லதங்கை சொல்லல்.

ஜோதூர என்ற வர்ணமெட்டு.

இராகப்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆகா வென் பாலரோகாம்
அகுதிபோலவும் ஆகினோம்

அநுபல்லவி.

தாகமோடு சோகமாகி யேகிறோமார் சோதனையோ

சரணம்.

அண்ணன் தேவியா
ளானாள் பாவியா
ஆகையாலே வேறுபாமன்
அகத்திலிருக்க லாமோவாரீர் (ஆ)

முன்செய் தீவினை
மூண்டதின் கனே
என்னசெய்வோ மெய்யரைநோவோம்
இறைபோனெழுதாக் குறைதனக்கினி (ஆ)

வசனம்.

அடா என் அருமைக் கண்மணிகாள்! இது நமது மாமன்வீட
ல்ல அப்படியானு லிந்தச் சண்டாளி இவ்விதமான கொடுமையெல்ல

ம் செய்வாளா? ஆனதா லிதோ தோற்றுகிறது மாமன்வீடு அங்குசெல்லலாம் வாருங்கள் போனவுடன் பசிதீர்ந்துவிடும்.

மூத்தகுமாரனாகிய குணசீலன்சொல்லல்.

நவதுளசீதள என்றவர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-ஏகதாளம்.

அக்டா.

இன்னொருமாமன்வீ டெங்குள தம்மனீ
யேய்த்தெனைக் கூட்டிக்கொண்டேகுறாய்
ஏ திது சூதுபோல் தோணுதே
யீசன்றன் சோதனை யீசன்றன்சோதனை
யெவ்வித மாமோ.

(கு-ம்) அம்மா! அதோ மாமன்வீடு இன்னொன்றிருக்கிறது அங்கு செல்லலாமென்று பழையபடி காட்டுப்பக்கம் கூட்டிச் செல்கின்றாயே என்னகாரணம்?

(ந-ம்) அடா குழந்தாய்! இதோ சமீபத்திலிருக்கிறது பேசாது வாருங்கள் செல்லலாம்.

ராமையா ரெகு ராமையா என்றமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-சாப்பு-தாளம்.

பல்லவி.

ஈசனே ஜெகதீசனே மைந்த
ரெழுவர்களும்பசித் தழுது கொடுவர
பழுதெனவோசெய்தேன் மழுவணியுங்கர (ஈ)

அநுபல்லவி.

நாச முறுபஞ்ச காலமதுவர
நாதனையும் பிரி வாகியே
தேசம் விட்டுமறு தேசம் வந்திப்படித்
தியங்குகின்றேன் மன மாழ்கியே (ஈ)

சரணம்.

பூவுலகிலெனைப் போலு மைந்தரைப்
போலுமதிகஷ்டர்க ளில்லையே
பாவியாள் செய்த மூளிகொடுமையைப்
பார்க்கிலும் வேறே யில்லையே (ஈ)
அஞ்சிடாதே யென்றாதரவுசொல
ஆருமொருவரு மில்லையே

வஞ்சியான் மடியாம லிருந்திடில்
வந்துவிடு மேனும் தொல்லையே (ச)

வசனம்.

ஏ ஜெகதீசா? பஞ்சகாலத்தினால் வாதையடைந்து அண்ணன்வீட்டிற்சிலகாலிருந்து பின்னர் செல்லலாமென வந்ததற்குப் பாவியாகிய மூளி யெங்களையிருக்க வொட்டாது கொடுமைசெய்து, தானே வந்தவழி பார்த்துப்போகும்படி செய்தனளே, பாலர்களும் பசியினால் வாடுகிறார்கள் இன்னமும் இந்தஜீவனை வைத்திருக்கவேண்டுமா? ஐயோ யென்னசெய்வேன்.

தனசீலன்.

அம்மா? எங்கே கூட்டிக்கொண்டு போகிறாயென்று மின்னொரு மாமன் வீடிருக்கிறது, அங்கு போகலாமென்றும் சொல்லுகிறாய் கடவுளையும் நொந்துகொள்கிறாய் விபரமென்ன?

நல்லதங்காள் சொல்லல்.

வாரேது ரெகுவாநு என்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

பாராயதோர் மாமன் பங்களா வொன்று தனைப்

அநுபல்லவி.

பாராயங்கேயிருந்து வயிற்றுப் பசிதணித்து
சோராகாநந்தகர்க்கு நிமிஷத்திற் சென்றிடலாம். (பா).

சரணங்கள்.

சென்றவுடனே வருத்தந் தீர்ந்துவிடுவதன்றி
என்றுங்குறையில்லாம லெல்லோரும் வாழ்ந்திடலாம். (பா)

(வ-ம்) அப்பா கண்மணி! என்னசொல்லுகின்றாய்? அப்படி ஒன்றுமில்லை அதோ தெரிகிறதுபார் அதுதான் இன்னொருமாமனாண்மனை அங்குசென்றால் நாமெல்லோரும் பசிமுதற்றணிந்து எப்போதுமே சுகமாய் வாழலாம் வாருங்கள்.

பூசிலன்.

அம்மா? அப்படியானால் நிரம்பசிலாக்கியந்தான் சீக்கிரமாய் நடக்கலாம்.

நல்லதங்கை.

ஏ பரமேசுரா? என்னசெய்வேன் நாட்டிற் பஞ்சம் வந்ததுந்தவிர வரும்போது பதியின் வார்த்தையையு மீறிவந்தேனேவழியிற்கண்ட

அண்ணனோடு கூடவராமற் றனியேவந்ததால் ஆகாதமொழியா லவஸ்தையடைந்து திரும்பவுமாயிற்றே, மீண்டுநாயகனிடம் சென்றால்சொல்லைத்தடுத்துச் சென்றையேயென்னபலனை யடைந்தாயெனவுங் கேட்பாரே, ஆனதாலிவ் வாரண்யத்திலேயே மடிவது உத்தமம் வேட்டையாடவந்தவுடன் அண்ணன்விசாரித்து நமமைத் தேடிவருவார் அவர் வழிகண்டுவரும்படி என்னாபரணங்களைக் கழற்றி அடையாளமாகப் போட்டுவருகிறேன்? அதின்படியே வந்தென்னைக் காணும்படிசெய்வாய் சிவமே?

குணசீலன் விருத்தம்.

நகரைவிட்டகலும்போது நமை வழியனுப்ப வந்த
புகள்பெறுதாதை நீங்கள் போகவொண்ணாது கெட்ட
சகுனமாயிருக்குதென்று சாற்றிடமீறிவந்து
சுகமென்ன அடையக்கண்டாய்த் துன்பமேகாணலாச்சே.

வசனம்.

அம்மா? நம்மை வழியனுப்ப வந்தபிதா நீங்கள் போகவேண்டாம் அபசகுனமாயிருக்கிறது, என்ற வார்த்தையைமீறி யெங்களையுங் கூட்டிக்கொண்டு வந்தென்னசுகத்தைக்கண்டாய்? இறந்துவிடலாமென்ற துக்கத்தையே காணலானாய், போறாததற்கு எங்களையுங் கொல்லப்பார்க்குறாய் என்னமோ தெரியவில்லை

நல்லதங்காள்.

அடா குழந்தாய்? அல்லடா வருத்தத்தினாலேஎன்னென்னமோ பிதற்றுகின்றேன் நீங்கள் பயப்படாதீர்கள் இன்னும் மாமன்வீடு தாய்வீடுதங்கைவீடு தமக்கைவீடுபந்துக்கள்வீடு யெல்லாமிருக்கிறதே அங்கங்கேபோய் பத்து பத்துநா ளிருந்தபோதிலும் நாளோடிப்போய்விடும், அதற்குள் பஞ்சமுந் தெளிந்துவிடும் நாம் சுகமாயூர்போய்ச்சேரலாம் யோசியாதீர்கள் வாருங்கள்.

(மனதுள் ஆலோசனை)

ஆ ஆ? நாம் ஏமாற்றி நமது பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டாரணியம் வந்துவிட்டோம் இனிஎப்படியாவது இறக்கவேண்டுவதுதான் அப்படியிறப்பதிலும், ஒருமிக்கமடிவதே உத்தமம் பாழுங்கிணறெங்கேயிருக்கிறதோ தெரியவில்லை பார்ப்போம்.

7

எந்தன் தவத்துதித்த பாலரே யென்ற
கண்டிராஜநாடக வர்ணமெட்டு.
இராகம்-முகாரி-ஆதிதாளம்.
கண்ணிகள்.

தெய்வமேயிவ் விதிக்கென்ன செய்வேனே யிந்தச்
செய்கைதனை யாரிடத்திற் சொல்வேனே
உய்வதற்கு வேறிடமுங் காணேனே முன்செய்
யூழ்வினையும் வந்து மூண்ட தோதானே
இப்படியும் வருமென்ன அறியேனே அறிந்
திருந்தாலிவ் விடம் நாடி வருவேனோ
தப்பிதம் வருமென்றன்று தடுத்தாரே யதைத்
தவிர்த்து வந்தேனே யண்ணனுடனூரே
பாவியென்னைப் போலப்பெண்கள் பிறப்பாரோ படும்
பாதரவுபார்க்கில் பெற்றோர் சகிப்பாரோ
ஆவியைத் துறப்பதுவே நலமாகும் இல்லை
யாகிலூரிலுள்ளோர் சிரித் திடப்போகும்

வசனம்.

ஓ தெய்வமே? பதியின்சொல்லை மீறிவந்தபாவத்தாலே யிக்கதிக்குள்ளாகினேன், இனிமேல் இக்கஷ்டப்பட்டும் மீண்டும் கணவனிடம் சென்றால் கேவலமாயெண்ணுவார், தவிரவும் என்போல் மாதர்களுக்கும் கேலிக்கிடமாகும் எனது மக்களுடன் மடியப்போகிறேன் நீயே கெதி வேறுகதியில்லை.

இடையர்களென்னும்
கோபாலர்கள் பிரவேசம்.

நாராயணக்கோன் வசனம்.

டேடே சமையா? சாத்தா? மாயா? கருப்பா? நந்தா? நானுயெங் கவீட்டிலிருந்து வாரபோது எங்காயாகிட்டருந்து தோண்டியிலேவை த்தச்சொல்லி மதியானக்கஞ்சி கொண்டுவந்திருக்கிறேன் நீ யென்ன கஞ்சி கொண்டு வந்திருக்கே.

சமையக்கோன்—என்டா நானுடா (ஊங்) நானும் கஞ்சியேகுடிச்சுப் புட்டு மதியானக்கஞ்சி கொண்டிவந்திருக்கே.

சாத்தக்கோன்—என்டா? என்னவெஞ்சனங்கொண்டு வருந்திருக்கி (றே?

சமையக்கோன்—மொனாத்தொக்கை

மாயக்கோன்—ஏண்டா கருப்பா? ஒங்கவீட்டிலெருந்து என்ன கஞ்சி கொண்டுவந்திருக்கிறே?

கருப்பக்கோன—இன்னைக்கிக் கஞ்சியில்லே கொஞ்சூண்டு கூழு மட்டுங் கொண்டு வந்திருக்கிறே.

மாயக்கோன்—ஏண்டா? வெஞ்சனம்.

கருப்பக்கோன்—கீரை.

நந்தக்கோன்—ஏ பலே மாயா? நேத்து ராத்திரி நோயா எங்க வீட்டிலேயிருந்து குருனே வாங்கிட்டு வந்தாலே அதென்ன பண்ணினிய.

மாயக்கோன்—அதெ நாத்திரி கஞ்சிகாச்சி குடிச்சுப்புட்டமுல்ல.

நந்தக்கோன்—மறுத்துக் கூலேது பின்னே ?

மாயக்கோன்—இது மூந்தாநாளு காச்சினது.

நந்தக்கோன்—அப்பச்சருதா.

நாராயணக்கோன்—ஏலே பயகலோ அந்தாங்கே போரமாட்டெடெல்லாங் திருப்பிக் கிட்டுவந்து கிட்டத்திலே விட்டுவிட்டு கிட்டு நம்மெல்லாம் வெளாடுவோ.

சமையக்கோன்—ஆம்டோ நாம் போயி பத்திக்கிட்டு வாரே.

சாத்தக்கோன்—டேடே நாராயண நீ இடைக்காட்டுச் சித்தம்பாட்டு பாடப்பண்ணி வச்சிருக்கே பாரு அதேச்சொல்லு நாங்கெல்லா ஆடிர்ரம்.

நாராயணக்கோன் இடைக்காட்டுச் சித்தர் பாடல் சொல்லுகிறது.

இராகம்-மோகனம்-அடதாளம்.

பல்லவி.

தாந்திமித்திரு தந்தக்கோனாரே
தீந்திமித்திமி திந்திக்கோனாரே

அநுபல்லவி.

ஆனந்தக்கோனாரே . அரு
ளானந்தக்கோனாரே

சரணம்.

ஆயிரத்தெட்டு அண்டமுங்கண்டேன்
அந்த வட்டத்துள்ளே நின்றதுங்கண்டேன்
மாயிருஞாலத்து நூற்றெட்டும்பார்த்தேன்
மந்தமனத்துறகு சந்தேகந்தீர்த்தேன் (தா)

அந்தக்கரணமெனச்சொன்ன வாட்டையும்
அஞ்ஞானமென்னு மடர்ந்தவன் காட்டையும்
சந்ததவமென்னும்வாளினால வெட்டினேன்
சாவாதிருந்திடக்கோட்டையுங் கட்டினேன் (தா)

மாயக்கோன்—ஏலே வாங்கடா நம்ம பிசாலேசுத்தி தும்பிபறந்துவெளாடுவோம்.

கருப்பக்கோன்—ஆமடா வாங்கடா நீபாட்டுச்சொல்ரா.

நந்தக்கோன் சொல்லல்.

இராகம்-காப்பி-ஆதிதாளம்.

கண்ணிகள்

அஞ்ஞானம் போயிற்றென்று தும்பீபற பா
மானந்தங்கண்டோமென்று தும்பீபற
மெஞ்ஞானம்வாய்த்ததென்று தும்பீபற மலே
மேலேறிக்கொண்டோமென்று தும்பீபற
அல்லல்வலேயில்லேயென்று தும்பீபற நிறை
ஆணவங்களற்றேமென்று தும்பீபற
தொல்லேவினைநீக்கிற்றென்று தும்பீபற
சோதியைக்கண்டோமென்று தும்பீபற

நாராயணக்கோன்—நில்லுங்கடோ ஆரோ ஒரு பொம்புலே வாராகூட பசங்கல்லா வாராங்க பார்த்துககிருவம்.

நல்லதங்கை—ஆரோ இடையர் வீட்டுப்பிள்ளேகள்போல் தெரிகிறது சமீபத்திற்போய் கிணறு எங்கே யிருக்கிறதென்று விசாரிப்போம்.

சமீபித்துக் கேட்குதல்.

விருத்தம்.

மாயவன் குலத்து வந்த மைந்தர்காள் தம்பிகாளென்
சேயர்காள் தாகமாகித் தியங்கியே மயக்குகின்றார்
தூயநீருள தாயாழுந் தோன்றிய கிணறெங்குண்டு
நேயமாச் சொல்வீராகி னீங்கள் புண்ணியங் கொள்வீரே.

வசனம்.

அடா ஆயர்குலத்து மைந்தர்காள்? எனது புதல்வர்கள் அதிதாகமாகத் தயங்குகிறார்கள், உண்ணுதற்கு நல்லதண்ணீர்வேண்டும் சமீ

பத்திற் கிணறும் ஆழமாய்ப் பார்த்தாற் சொல்லுங்கள் உங்களுக்குக் கோடி புண்ணியங்கிடைக்கும்.

ஆயர்கள்.

நீங்க ஆரம்மா ஏங்கூரு நல்லண்ணமகாராஜா தங்கச்சிபோ விருக்கிரிய.

க-ம்—ஆம் அப்பா தம்பிகளா?

ஆ-ம்—இங்கே எங்கிருந்து போரிய?

க-ம்—இங்கே தான் மதுரைக்குவந்துவிட்டு எங்களூருக்குப் போகிறோம்.

ஆ-ம்—அடேடே அப்படியா நாங்க சொயமான பசும்பாலுகறந்து தார குடிச்சிட்டுப்போங்க உங்களாலே கிணத்திலே பெறங்க முடியாது.

க-ம்—அப்பா? அதெல்லாம் எங்களுக்கு வேண்டாம் கிணறிருக்கு மிடஞ்சொன்னாலே பாற்கறந்து கொடுத்தமாதிரிதான். அதை மட்டுஞ் சொல்லுங்கள்.

ஆ-ம்—அம்மா? அப்படியானுச்சரி அதோ கிலக்குப் பக்கம் பெரிய கிணமிருக்கிறது அங்கே போயி தண்ணி யல்லிகுடிங்க ஆனா உசாராப்போகனும் எனுண்டா ரெம்ப ஆலம்.

க-ம்—நல்லது பார்த்துச் செல்கிறோம்.

நல்லதங்காள் கிணற்றின் கரையில் நின்றுகொண்டு

சொல்லல்.

பாலகா யானுன்னை வெட்ட என்றமெட்டு.

இராகம்-கேதாரம்-சாப்புதாளம்.

கண்ணிகள்.

வாழ்வினைசெய்தாழ்வி னாலே
யுற்றோமிந்தமண்ணின் மேலே
வாழ்வொருகால்தாழ்வொரு கால்
வந்திடுந்தராசு போலே
என்றதவினை விலலை
யெனனசெய்வோ மைந்தர்களே
என்றிருந்தபோது மோர்கா
ளிறப்பதன்மை யென்பார்களே
ஏழுமக்கள் பெற்றெடுக்க
வென்னபாடுபட்டே னப்போ இப்போ

பாழுங்கிணற் பார்த்துத்தள்ளப்
பாதகிகான் போறேனிப்போ

பூமிமெச்சிடு மண்ணு மலக்கோர் துணை என்றமெட்டு.

இ-ம்-செஞ்சுருட்டி-அடதாளம்.

கண்ணிகள்.

பாலரானவரைப் பாழ்கிணற்றிலிடப்
பார்க்குறேன் உயிர்போக்குறேன் துயர்
தீர்க்குறேன் சற்றும்

பயமிலாதுமூளிக் கபயமென்றுபழி யேற்குறேன்
ஞாலமீதுகெட்ட காலங்கிட்டினது
ஞாயமோ என்னமாயமோ யாரு
பாயமோ அந்த

நான்முகத்தனரி மான்கரத்தன்செய்ச காயமோ
நாயகன்மொழியை மீறிவந்ததற்கு
லாபமோ அந்தப்பாபமோ சொல்லேன்
தாபமோ முன்னம்

காடியெங்களுக்குத் தேடியாவரிட்ட சாபமோ
தாயுமைந்தருமா யேககாலபதிற்
சாகவோ வொன்றுய்வேகவோ வேறுய்ப்
போகவோ வந்தோம்

சமையம்பார்த்துநல்ல தமையன்விட்டுக்கிதற் காகவோ.

நல்லதங்காள்.

ஐயோ? யான் அருமையாக பத்து பத்து மாதங்களாகச் சுமந்துபெற்ற புத்திரர்களை யிக்கணற்றி லெவ்விதம் துணிந்து தள்ளுவேன் கல்லது இக்கோலமாய் வந்தபிற்பாடு மீண்டும் போகிறதா?

வெண்பா.

பர்தவுடல் விண்பாடு பட்டவுடல் சீசீதுற்
கந்தவுடலொன் றுக்கா காதவுட—லிந்தவுடல்
வைத்துப்பார்த் தென்ன வலிய வுயிர்மாய்த்துச்
செத்துப்போனாலும் நல்லது.

எனநீதி வாக்கியங்களுங் கூறியிருப்பதுடன் "வாழ்வில்லாச் சங்கடத்திற் சாவதேநன்று" என ஔவையாரும் மொழிந்திருக்கிறுள், ஆனதால் முதலில் ஒவ்வொரு குழந்தைகளாய் கிணற்றிற் றள்ளிவிட்டு பின்னர் நாமுமடிந்து விடுவோம்.

13

நல்லதங்காள் ஒவ்வொரு குழந்தைகளாய்க் கிணற்றில் தூக்கிப்போடல்.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

மதிப்பெல்லாங் கெட்டது விதிப்படி விட்டது
வாழ்வும் வேணுமோ
மக்களா மக்களா மக்களா
ஆறிலுஞ்சாவுதா னூறிலுஞ்சாவுதான்
தேறிக்கொள் வீரிதை
மக்களா மக்களா மக்களா
அண்ணியாளிடத்தினி லவத்தைப்பட்டது போதும்
ஐயோ யிதற்கென் செய்வோம்
மக்களா மக்களா மக்களா
ஒருமயிருதிர்த்தாலுங் கவரிமான் வாழாது
உடல் போயி யுயிரேது
மக்களா மக்களா மக்களா
ஆறுமக்களும் நீங்க ளதிக சிலாக்யமே
கூறும் வகைக்கென் செய்வேன்
மக்களா மக்களா மக்களா
ஒக்கப்பிறந்த யேழு மக்களா மக்களா
ஒருமையாய் மாளுவோம்
மக்களா மக்களா மக்களா
பாழுங்கிணற்றில் வீழ்ந்து மாளுவதே நலம்
பாவி நானென்ன செய்வேன்
மக்களா மக்களா மக்களா
வாடா மதிமுகனே ஓடாதே யென்சுதனே
நாடலாமீசன் பதம்
மக்களா மக்களா மக்களா

நல்லதங்காள் இளைய ஆறுகுழந்தைகளையுந் தள்ளியவுடன் மூததகுமாரனை குணசீலன் சொல்லுதல்.

பட்டாபிஷேகம் படைத்திந்த என்றமெட்டு.

இராகம்-தேசிகதோடி-சாப்புதாளம்.

கண்ணிகள்.

அன்னையேநீயிந்த அன்னீதமாகவே
என்னுடதம்பியர்களை மன்னுமுயிர்

ஐயையோமாத்து விட்டாய் ஒருமித்து
வையாமல்சாய்த்து விட்டாய்
ஆசனினால் பாதகமே
நீதனைசெய் தேயென்னைவிட்டிடுவாய்

நல்லதங்கை.

பஞ்சத்தாலுழன்றி வஞ்சத்தாலும்பட்ட
சஞ்சத்தாலேயென் னெஞ்சத்துணிவுடன்
துஞ்சும்படிக் கிணற்றில் தள்ளிவிட்டேன்
அஞ்சிடாகிப் புணத்தில்
பாக்கியிரு பேர்க்குளுனைப்
போக்கிவிட்டு மாய்க்குறேனென் னுயிரை

குணசீலன்.

வின்னுவன்கேளம்மா உள்ளபடியேநான்
ள்ளுக்தண்ணீருக்கட் கள்ளியிறைக்கவோர்
பிள்ளைதான்வேண் டாமா என்னையும்நீ
துள்ளக்கொல்லப் போமா
விட்டிடுவாய்ப் பட்டத்திற்கா
யட்டதிக்குங் கட்டியரசாளுவேன்

நல்லதங்கை.

மக்களறுவரு மொக்கமடிந்துநீ
மொக்கெள்ளுநீரையி றைக்காவிடிவிக்கட்
வடக்குக்கதி யில்லையோ போடாபோவு
னக்குமதி யில்லையோ
மற்றவரைச் செற்றுவிட்டேன்
உற்றிடநாம் பெற்றுயிர்வாழலாமோ

(கு-ம்) அம்மா? உலகத்தில் எத்தனையோபேர்பிள்ளை வேணுமெனப் பெருந்தவஞ் செய்கிறார்கள் தவிர, கடைசிகாலத்தில் மாதாபிதாக்களுக் கேமக்கடன்முடித் தெள்ளுந்தண்ணீரிறைக்க வேண்டாமா? இன்னாருடைய புத்திரன் என்று பேர்சொல்வதற் கொருவனாகிலு மிருக்கவேண்டாமா? என்னையும் கொல்லப்பார்க்கிறாய் விட்டுவிடு எங்காவதுசென்று பிழைத்துக்கொள்கிறேன்.

(ந-கை-வ-ம்) அடா கண்மணி? உன்னுடைய தம்பியர் ஆறுபேர்களு மடிந்துபோனார்கள், நீயொருவன் மட்டுமுயிரோடிருந்தெங்களுடைய பேர்சொல்லவும், ஈமக்கடன்முடித் தெள்ளுந் தண்ணீரிறைக்கவும் போகிறாயென்றா லெப்படி நம்புகிறது? தவிரவும்மற்ற ஆறுபே

ரையுங் கொன்றுவிட் டுன்னை மட்டும் விட்டுவிட்டாலென்னை யிவ்வுலகத்தா ரவமதிப்பார்கள்? ஆனதாலுன்னையுங் கிணற்றிற் றள்ளிவிட்டு நானுமடிகிறேன் ஓடாதடா கிட்டவா.

(கு-ம்) அம்மா? உலகத்தில் எத்தனையோபேர் பிள்ளையில்லையென்று யாகம் தவ முதலியவை செய்கிறதும், யாத்திரைமுதலிய செய்கிறதுமாயிருக்கிறார்கள். உனக்கு யாங்கள் கடவுள்கிருபையால் ஏழுபேரும் புத்திராரயவதரித்து மாதாபிதாவின் வம்மிசம் பெயர் சொல்லவிருந்த வெங்களில், அறுவரையும் கொன்றுவிட்டதுமல்லாமலென்னையுங் கொல்லத்துணிகிறாயே? கொஞ்சமேனு நெஞ்சிலிரக்கமில்லையா இதற்குத்தானா பிறந்தோம்?

விருத்தம்.

மைந்தரைப் பெறு கின்றதும் மாசிலாப்
பிந்தியின் பொடு போற்றிவளர்ப்பதுந்
தந்தைமாண்டுழி தம்முறைக்கேற்பன
அந்தியில்கட னாற்றுதற் கேயன்றோ?

வசனம்.

என்று நீதி நூல்களும் சொல்லப்பட்டிருக்கிறது.

குறள்.

மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்தம்
சொற்கேட்ட லின்பம் செவிக்கு.

வசனம்.

என்று திருவள்ளுவரும் மொழிந்திருக்கிறார். அப்படியிருக்க இப்படி எண்ணங்கொள்ளலாமா?

நல்லதங்கை சொல்லல் தர்க்கம்.

சோமசேகரனருளும் பாலாவேலா என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

போதும் நீயுரைத்தநாயம் கேட்டேன்கேட்டேன் ஓடிப்
போனாலுமுன்தனைவிட மாட்டேன்மாட்டேன்
வாதனைசெய்யாதடா மயக்கமுண்டாகுதடா
வயிற்றுப்பசிதணிக்கு மார்க்கமுங் காணேனடா

குணசீலன்.

பிள்ளைகளைக் கொல்வதிலுன் போலேபோலே பார்க்கப்
பின்னையாருமில்லையிம்மண் மேலேமேலே

தொள்ளிவைக்கவுங்கட்குருழந்தையொன்றுவேண்டாமோ
உள்ளமதிலிரக்க மெள்ளளவுமில்லையோ

நல்லதங்கை.

தாயில்லாதபிள்ளையென்று தள்ளி தள்ளி யுனைத்
தானடித்துலைவாரடா கிள்ளிகிள்ளி
றாயவனேயுயிரைத் துறப்பதுநலமாகுஞ்
சொன்னபடிநீகேட்கில் சின்னமொன்றில்லையடா போ

குணசீலன்.

அம்மம்மாவுன்னெஞ்சிரும்பா கல்லாகல்லா உனக்
காருமாவிந்தக்கொடுமை சொல்லாய்சொல்லாய்
விம்மல்பொருமல்கொள்ள வேண்டாம்விட்டிடுபழி
மேவுமல்லாதுநல மேதும்வாராதுபாவி (அம்)

நல்லதங்கை வசனம்.

அடா கண்மணி! உன்னை உயிருடன் விட்டுச்சென்று லுலகத்தி லுள்ளவர்கள் தாயில்லாப்பிள்ளையென்று தலையிலடிப்பார்கள். அவ் விதபழிப்புக் கிடங்கொடுக்கப்படாது வேறேயொன்றும் சொல்லாதே இதோ உன்னையும் கிணற்றிற் றள்ளிவிட்டேன் விழுவாய்.

நல்லதங்கை எழுவரையும் கிணற்றில் தள்ளிவிட்ட

பின்னர் துயருறுதல்.

மோரிஜான்ஜாலல்யபியாரே யென்றமெட்டு

இராகம்-காப்பி-ஏகதாளம்.

பல்லவி.

ஐயோநான்கொடும்பாவி யானேனே
யாருமுதவியின்றிப் போனேனே

அநுபல்லவி.

வையமிசையென்போல் மாபாவியாருண்டு
செய்யும்வகையேதென தெரியேனே (ஐ)

சரணங்கள்.

ஏழுமைந்தரிழந்தே யிருக்கிறேன்றனிமையாய்
வாழும்விபரமொன்றுந் தோணேனே (ஐ)
அவதியடைவதற்கே அண்ணன்மனைக்குவந்தேன்
எவிடஞ்சென்றயிருப் விருப்பேனே (ஐ)

வசனம்.

நல்லதங்கை ஆதியோடந்தம் பிறந்தது முதல் இறக்கும் வரை சொல்லுதல்.

ஆசிரியவிருத்தம்.

அங்காளின் மதுரையர சாள்ராம லிங்கற்கும்
அன்னையிந் த் ராணிக்கும் நான்
அருமைமக ளாயுதித் ததற்கழுவனோ அல்ல
தவர்மாண்ட தற்கழுவனோ
மன்னன காசிபன் மணமாலை யிட்டங்கு
வாழ்ந்ததற் கழுவனோ ஏழ்
மைந்தரைப் பெற்றதற் கழுவனோ பனிரண்டு
வருஷமாய்ப் பஞ்சமதனால்
சின்னபின் னப்பட்ட தற்கழுவனோ அண்ணன்
தேசமதனைத் தேடிவந்
திடும்வழியி லொருவேடன் சேரவா வென்றதைச்
சிந்தையினி னைத்தழுவனோ
பொன்னன அண்ணனைக் காட்டினிற் கண்டே
புலம்பிமனை வருமுன்னமே
பொல்லாத மூளிவர வொட்டாது கதவுதாள்
போட்டகொடு மைக்கழுவனோ
நெடுநேரம் வரைநின்று கதவுதிற அண்ணியே
நினதுமரு மக்களுடனன்
நிற்கிறே னென்றோதி யுங்கதவுதிறவாத
நிட்டூரமதற் கழுவனோ
உடனேந்து பசியால் வருந்திடும் பிள்ளைகட்
கொன்றுங் கொடாதடித்தே
யோடுங்க ளென்றதற் கழுவனோ கூழ்வேக
உலராத பச்சைவாழை
யிடுதண் டெரித்ததற் குப்பானை யாற்சிர
மேலிட் டுடைத்ததற்கும்
விம்மியழு வனோவீடு விட்டுவெளி யேறென
விரட்டிவிட் டதற்கழுவனோ
தொடுவினையி னலிங்கு வந்தேழு மைந்தரைத்
தூக்கிக் கிணற்றிலிட்டுத்

துடியாக மாண்டனர்க ளேயதற் கழுவனே
தோகையா னேதுமறியேன்
ஐய்யவுமை பங்கில்வள ரையனே யென்னையும்
தொண்டுகொண் டாளுவாயே.

நல்லதங்காள் குழந்தைகளைக் கிணற்றில் தள்ளிவிட்டு
திருமங்கிலியம் ஆபரணங்களையும் கழற்றிக்
கரையில் வைத்துவிட்டு தோத்திரம்
செய்து விழுதல்.

அவனியிலாரேனும் என்ற மெட்டு.

இராகம்-கானடா-ஆதிதாளம்.

கண்ணிகள்.

சந்திரசடாதர சம்போகங்காதர
தையல்முறைக்கிரங்கித் தயைசெய்குவாயே
மைந்தரெழுவரையும் மாளும்படிக்கிணற்றில்
மங்கைநான் தள்ளிவிட்டு மடியப்போகிறதினால்
தாலியாபரணங்கள் தனைக்கழற்றிக்கரையில்
தடையின்றிவைக்குறேன் தமையன்றிச்செய்வாய்
எலமற்றொருசறிய இல்லாதபடிச்செய்வாய்
இன்றொருமிக்கவிழுந் திறக்குறேனிறக்குறேன்

காட்டில் வேட்டையாடிய நல்லண்ணன் நகர்

வந்து அரண்மனை சேர்ந்தபோது

மூளி சொல்லல்.

தரு.

காதாந்த ஹோஜானிஜான் என்றமெட்டு.

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

துக்டா.

காதா நமஸ் காமே யெனது
காதா நமஸ் காமே
புரிந்தேன் புரிந்தேன் புரிந்தேன் யெனது

19

பூதலம்புகழோய் யாரா
பொன்மலேர்புய வீரா
நீதிதவறாத யோகா
நிருமலமதான் யூகா
நேசா வாசா ஆசையாம் (நா)
பிராணேசா வந்தனம்.

(நல்லண்ணன்) கல்யாண் காதலி? என் அருமைத் தங்கையாகிய நல்லதங்காள் இங்கு வந்தனளே.

நாச்சே நாச்சே யென்ற மெட்டு.

இராகம்.

பல்லவி.

எங்கே எங்கே
என்னுடைதங்கை வந்தாளோ

அநுபல்லவி.

தன்குழந்தையேழுடன் தானும்நேரேவந்தவள் (எ)

சரணங்கள்.

பஞ்சத்தின்கொடுமையால் சஞ்சலித்துவந்தனள் (எ)
காட்டில்வேட்டையாடையிற் கண்டிங்கேயனுப்பினேன் (எ)

வசனம்.

அடி நங்கா! யான வனத்தில் வேட்டையாடிக் கொண்டிருக்கும் சமையம் என் தங்கையானவள் ஏழுபிள்ளைகளையுங் கூட்டிக்கொண்டிவ்வூர் வருகிறதற்கு வழிதெரியாமல் மயங்கிநிற்கும்போது நான் கண்டு பல்லக்கிலேற்றியனுப்பினேன், அந்தக் குழந்தைகளொருவரையாவது காணேம் தங்கையையுங்காணேம் காரணம்?

மூளி வசனம்.

பிராணேசா? தாங்கள் காட்டில் கண்டனுப்பிய என் அருமை நாத்தியார் க்ஷேமமுடன் வந்துசேர்ந்தனள். பின்னடந்தவைகளைச் சொல்லுகிறேன் கேளுங்கள் யிங்குவந்து.

ஜப்தகலந்தரு என்றமெட்டு.

தரு.

சேர்ந்தவென் னுத்திக்குச் செய்த வுபசாரத்தைச்
செப்புவேன் கேட்டீர் மனம் நாட்டிப்
பாந்தமாயவளையும் பாலரெழுவரையும்
பண்புடனே பனி நீராட்டி

பட்டுவஸ்திரங்கொடுத்துத்தரித்திடவும் பின்
பற்பல ரத்னப்பணிகள் திருத்திடவும் செய்து
பால்பழ மதிரசமும் அப்
பளம்வடை பாயாசமும் நெய்
பக்குவக்கறிகளறு சுவையமைத்து சம்
பாவரிசியாலே நல்லசாதம் சமைத்து

பாங்காய்ப் படைக்கவுண்டு
நீங்கா மஞ்சத்தின் மிசை
தூங்கா திருந்தவரைத்
தூங்கும்படி செய்தனன்

இராஜன் வசனம்.

ஆகா பிராணசகி? இவ்வித உபசாரணை முதலானதும் செய்தனையா?

அலங்காரி வசனம்.

ஆம் பிரபு? இவ்வளவும் செய்தேன் தங்களிடம் பொய்சொல்வேனா?

இராஜன்.

சகி? நீபொய் சொல்லுகிறாயென்றோ சொல்கிறேன் என்னிடம் சொல்வாயா? அப்புறம் நடந்ததென்ன?

அலங்காரி சொல்லல்.

மேற்படி ௬௫

தூங்கா தழுதிருந்த சுதரைத் தூக்கியெடுத்துத்
தொட்டினி லேற்றியுந் தாலாட்டி
மாங்காயுடனேயிளந் தேங்காய் கொடுத்தழுகை
மாற்றியே பலவிதப் பராக் காட்டி
வாய்க்கு ருசையாகிய தின்பண்டங்கொடுத்தும் தலை
வாரிச்சடையிட்டுருச்சுக்குப்பி முடித்தும் கண்ணில்
மையும் நெற்றிதனிற் பொட்டும் இட்டும்
கையில் விரலணி யிட்டும்
காதலோடருமையாய்ச் சிராட்டி கிடுத்து
மாதுநானும் பின்னயர்த்து கொண்டேன் படுத்து

மானுளப்புறம் பார்க்கக்
காணாதிருக்கக்கண்டேன்
யானேது செய்வேனிது
தானுதுமுன் மையிக்கு

சபாஷ் இந்நேரம் சொன்னது சரி இப்போது சொல்வதுதான் சுத்தப்பொய்

மூளி.

நாதா? என்னபொய் சொல்கிறேன்?

அரசன்.

அடி? மற்றஉபசரணை செய்ததெல்லாம் சரி? நீ அவள் போகும்போது சொல்லாதபடி மக்களுடன் காணாமற்போய் விட்டாளென்று சொல்வதிருக்கிறதே இதுதான் சுத்தப்புரட்டு இதுபோல்தான் அவளுக்கு உபசாரணை செய்திருப்பாய்? கெட்டிக்காரன் பொய் எட்டுநாளைக்குள் தெரியும் என்பதுபோல. தெரிகிறது உள்ளதைச்சொல்?

மூளி.

தோழிகாள்! பார்த்தீர்களா? வந்த நாத்திக்கு எவ்வளவு உபசரணை செய்தேன்? என்னஅருமை பாராட்டினேன்? பொய்சொல்லுகிறேனென்று சொல்லுகிறார் நானெவ்வளவு செய்தபோதிலும் என்னுடைய ராசி இல்லையென்றுதான் முடிகிறது என்ன அநியாயம்?

அரசன்.

அடி நீயிவ்வளவு உபசாரம்செய்திருந்தால் ஏன்போய்விட்டார்கள்.

ஒப்பேனென்றவள்சொன்னாள் என்ற கண்டிராஜா

நாடகவர்ணமெட்டு

இராகம்.

கண்ணி.

செப்பா தெங்கவள் சென்றிடுவாள்
செப்படி யுண்மை யிப்போதே
சேயரைக் கூட்டிக் கொண்டே
சென்றிடுவாளோ ஊருக்கே
செப்படிவித்தை செய்யாதே
உன்னைச் சிக்ஷை செய்வேன் தப்பாதே (செ)

வசனம்.

அடி மூர்க்கை? யாரை யேமாற்றப் பார்க்கிறாய் உள்ளதைச் சொல்கிறாயா? ஓரேவெட்டாய் வெட்டவா? சீக்கிரம்.

மூளிசொல் விருத்தம்.

பலமுடன தட்டிப்பேசிப் பயமுறுத்திடவும் வேண்டாம்
நலமிகுமின் தங்கைக்கு நானொரு தீங்குஞ் செய்ய

விலைபிது வுண்மையாரு மெவர்சொலுங் கேட்கவேண்டாம்
தலைபது வெடித்திட்டாலும் சாற்றிடேன் பொய்யும்பாலே.

நல்லண்ணன் ஆலோசனை.

நல்லநிருக்கட்டு மிவள்சொல்வது நம்பத்தக்கதல்லாததா யிருக்கிறது, அண்டைவீட்டுக்காரர் அறிந்தவரைக் கேட்போம்.

அண்டைவீட்டாரை விசாரித்தல்.

மார்த்தாட பாரதனு என்ற மெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-சாப்பு.

பல்லவி.

ஆரேனும் கண்டதுண்டா—நல்லதங்கையை

அநுபல்லவி.

பேரானபிள்ளையேழு பேரைக்கூட்டி வந்தாளே (ஆ)

சரணம்.

அண்டையயல் வீட்டுள்ள அறிஞரே சிறியரே
ஒண்டொடிவாரேனேங்க ளுண்மையைச் சொல்லுங்கள் (ஆ)
காட்டினிற் கண்டுபேசிக் களிப்பா யனுப்பிவைக்க
வீட்டிற்கு வந்திருந்தாள் மீண்டுமவளைக் காணேன் (ஆ)

அண்டைவீட்டார் சொல்லல்.

ஐயா! உம்முடையதங்கை நல்லதங்காள் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு அரண்மனைக்குவந்தாள்வந்தவர்களுக்கு, உம்மனையாள் கபாடபந்தனம் பண்ணிக்கொண்டு திறக்கமாட்டேனென்றாள், பின்னரெவ்விதமோ உள்ளே நுழைய அவளுக்கு ஒன்றும் உபசாரம் செய்யாமல் வந்தவழியே போடியென் றவளையும் குழந்தைகளையும் விரட்டிவிட்டாள், இதுதான்தெரியும் பின்னென்கு சென்றாளோ.

நல்லண்ணன்

அப்படியா? அசண்டாளி என்ன ஞாயம் செய்தாள் ஐயோவென் தங்கை எங்குசென்றிருப்பாள் நல்லது இந்தவழியே போய் தேடிப்பாக்கிறேன்.

இராகம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

என்னுடைய தங்கையவ
ளெங்கு சென்றனளோ எங்கு
ஏங்கி நின்றனளோ பசி

ஏக்கமாய்ப்பிள்ளை யேழுபேருட
னேது யீன்றனளோ
காட்டினிலே கண்டதன்றி
வீட்டிற் கண்டிலனே வார்த்தை
களையும் விண்டிலனே வேண்டுங்
காரியமேதும் நேரிலேசெய்து
களிப்புக் கொண்டிலனே
மூளி அலங்காரிசெய்த
மோசமே நினைந்து மன
ரோசமாய் விரைந்து தன்
தேசமதற்குப் போயுன்றந்தாளோ
யோசனை புரிந்து

வசனம்.

அம்மா? குலசேகரி யெங்குசென்றிருக்கிறாய்? காத்தியாகிய சண்டாளி செய்த சதியை நினைந்து நொந்து நிற்கிறையா? நீயெங்குபோயிருந்தாலும் உன்காலின் தடம்பற்றியே வருகிறேன் (திகைத்து) ஆரண்யபாரக்கம்போய்த் தேடிப்பார்ப்போம்.

ஐயோவென் ஜானகியை-என்றமெட்டு.
இராகம்-முகாரி-தாளம்-சாப்பு.
கண்ணிகள்.

அம்மாயென்னல்ல தங்கா
அருமை மிகுந்த தங்கா யிவ்
வாரண்ய மேகினையோ தங்கா தங்கா
கல்யாணம் செய்து சென்ற
காலமுதலா யென்றன்
கடிநகர் வந்தா யில்லையே தங்கா தங்கா
பஞ்சகாலத்தால் நொந்து
பாவியென்மனை வந்து
பலனென்றுங்காணவில்லையே தங்கா தங்கா
சண்டாளி செய்த வஞ்சம்
சகிக்கவொண்ணும நெஞ்சந்
தன்னிற்கவலைகொண்டையோ தங்கா தங்கா

விருத்தம்.

அழுகிறபிள்ளையொன்றை யமர்த்து நற்கெவருமாகார்
எழுகிறகுழந்தைதம்மை யெப்படி கடத்தித்தூக்கி

வழுவறப்பசிகளாற்றி வழிதெரிந்தடவிகோக்கிக்
சழல்மிகவோகச்சென்றாய் காரணமறிந்திலேனே

வசனம்.

ஆ யென்சகோதரி! ஒருபெண்ணானவள் ஒருகுழந்தை யழுததா னால் அக்குழந்தையை யமாத்துதற்கு சாத்தியப்படாமல் போய்விடு கிறாள். ஏழு குழந்தைகளேயும் தூக்கியும் நடத்தியும் பசியாற்றியும் முன்பின்னறியாத அடவிபாலெவ்வாறு நடந்தனே? கொடிய மிருகங் கள் கண்டால் கொன்றுவிடுமே.

தேரி மேரி என்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி ஆதிதாளம்.

பல்லவி.

தேடியுஞ்ச கோதரிதனைக் காணிலேன்

அநுபல்லவி.

இக்காடெலாமலைந்து மிடந்தோணிலேன்

சரணங்கள்.

கைகாலயர்ந்தெங்கனம் சென்றாளோ தான்
மெய்யாககரத்திற்கே சென்றாளோ
பொய்கை கிணறு முதல்போவேனே அங்கு
போயிருந்தா லழைத்து வருவேனே
பொற்பணி ரத்தின பூணாரம்
வேணதெல்லாந்தந்து சீர்செய்வேனே யினி (தே)
சாமகாலங்கழி வாகியதின்பின்
தன்னகர் கொண்டுபோய்ச் சேர்ப்பேனே
தார்வன மீதினிலே (தே)

வசனம்.

ஏ விலக்கினங்காள்? என்சகோதரி எழுபிள்ளைகளைக் கூட்டிக் கொண் டிம்மார்க்கமாய் வந்தனளா? ஐயா பார்த்திருந்தால் சொல்லக் கூடாதா? உங்களுக்குத் தருமமா? பேசாமல் ஒடுங்கினதீர்களே.

கல்லண்ணன் வசனம்.

ஏஐயா குலதிகாமணிகாள்! இங்கொருபெண் ஏழு குழந்தை களைக் கூட்டிக்கொண்டுவரப்பார்த்தீர்களா, பார்த்தாற்சொல்லுங்கள்.

ஆயர்கள் வசனம்.

மகாராஜ்! இங்கோரம்மாள் குழந்தைகுட்டியுடன்வந்து தண்ணீர்குடிக்கவேணும கிணறெங்கே யிருக்குனு கேட்டாக நாங்க பால்பீச்சிக் குடிக்கிறோம் குடிங்கவெனச் சொன்னோம அதுவேண்டாம் கிணத்தைமட்டும் சொல்லுங்கவென்னுகச் சொன்னம் கிணத்துக்குத்தான்போனுக.

அரசன்.

ஏ ஆயர்காள்! கிணறு எங்கேயிருக்கிறது எந்த மார்க்கம்போனர்கள்?

ஆயர்கள்.

அதோ தெரியுதே அதுதாங்கிணறு, அங்கே போயிருப்பாங்க தண்ணிகுடிச்சிகிட்டு இருப்பாங்கோ.

நல்லண்ணன் அடையாளப்படி போய் கிணற்றுக்
கரையில் தாலி முதலிய ஆபரணங்க ளிருப்
பதைக்கண்டு சொல்லுதல்.

தரு.

இராகம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆபரணங்கள் கண்டேன் நான்
அளவிலாத்துயரங் கொண்டேன்

அநுபல்லவி.

பாவமொன்று மறியாவிற் பன்னிபாம் நல்லதங்கைக்குக்
கோபமோ மனஸ் தாபமோ வெவர் சாபமோ இது (ஆ)

நஞ்சை புன்செய்கள் சேர நல்லவயல் தன்னைச்சார
சஞ்சார மில்லாத காட்டிற் சரிந்த கிணற்று மேட்டி
வஞ்சிபுனையும் பொன் செய்தா லி
யுஞ்சரமோய் (ஆப)

வந்தவள் தனையென்றேசி கொந்ததினுலே
இந்தக்கிணற்றில் விழுந்திறந்திருக்கத் தான்வேணும்
பந்தபாசத்தால் சிந்தைகோகுதே
அந்தோ வென் செய்வேன் (ஆப)

வசனம்.

ஆ? என்னகாலம் அங்கு கரையின்மேல் தன்னுடைய மாங்கல்யம் ஆபரணமுதலியதும் கழற்றிவைத்திருக்கிறது சோதரியையும் குழந்தைகளையும் காணேம் எங்குபோயிருப்பார்கள்? ஏ தங்கா! ஏகுலசேகரி! என்னை ஏனென்று கேட்பாரொருவருமில்லே. ஒருவேளை கிணற்றுள்ளிரங்கி சலம் சாப்பிடுகிறார்களோ பார்க்கிறேன் உற்றுப் பார்த்தல்.

கிணற்றில் விழுந்து இறந்துகிடக்கும் பிள்ளை

களையும் தங்கையையும் பார்த்து

நல்லண்ணன் சொல்!

விருத்தம்.

அப்பனும் ராமலிங்க ரருங்கவத் துதித்ததங்கா
தப்பிலா மூளிசெய்த துரோகமென்னிடஞ் சொல்லாமல்
ஒப்பிலாக் குழந்தைதம்மை யொருமிக்கக் கூட்டிவந்து
இப்பெருங்கிணற்றி லேவிழ்ந் திறந்தது ஞாயந்தானே.

வசனம்.

என்னருமை தங்கா! அன்யாயமாக ஏழுகுழந்தைகளையுங் கூட்டிவந்து கிணற்றிற்றள்ளி தானும் மாண்டனேயே இதுஞாயமா? மாதுரோகியாகிய மூளிசெய்த கொடுமையெல்லா மென்னிடம் சொல்லாமல் வந்துவிட்டையே? சொன்னலவளைத் தண்டிக்கமாட்டேனு?

ஐயோ கிணற்றிலிருந் தெடுப்பார்க ளொருவரு மில்லையே.

(ஆயர்களைப் பார்த்து)

ஏ ஆயர்காள்! இங்கே ஓடிவாருங்கள்.

ஆயர்கள்.

(ஓடிவருதல்) என்ன மகாராஜா?

நல்லண்ணன்.

இங்கே வாருங்கள் இந்தக்கிணற்றுக்குள் விழுந்திறந்து கிடக்கிறபிரேதங்களை வெளியேற்றி விடுங்கள்.

ஆயர்கள்.

மகாராஜா இதோ எடுத்துப்போடுரோம் (உள்ளேயிறங்கி வெளியேற்றுதல்) இதோ யெடுத்துப்போட்டோம் (ஆயர்கள் பார்த்து)

அம்மா நீங்கள் இறப்பதற்குத் தானோ எங்களை நினைந்தெங்கே இன்னுமேகேட்டிய.

நல்லண்ணன் தங்கையைக்கண்டு

புலம்புதல

பட்டாபிஷேகம் படைத்திந்த என்றமெட்டு

இராகப்-தேசிகதோடி-அடதாளம்.

கண்ணிகள்.

ஜோமேகனுகவே மாமதுராபுரி
நேமமுடனுண்ட ராமலிங்கர்பெற்ற
மாமகளே மயிலே காசிராஜன்
தாமகிழுங் குயிலே
கோபம் வந்ததிவ் வாறுசெய்ய
நீ புகுந்த தேபெரு மோசமையோ
உனை மணந்திட்ட மன்னனுங்காசிபன்
என்னை வந்தென்னுட கன்னிபெங்கேயென்றால்
என்னை நான் கூறிடுவேன் எந்தவிதம்
பின்னதுந் தேறிடுவேன்
ஒண்டொடியே அண்டருல
கண்டினையோ மண்டலத்தாசைவிட்டே

வசனம்.

ஆ எனதருமை சோதரி இவ்விதமானபெரும்ஆபத்துக்குள்ளாக்கி உனதுடைய நாயகன் மனம் நோகும்படி செய்தனையே ஐயோ யெவ்வாறு சகிப்பார்.

நல்லண்ணன் குழந்தைகளையெடுத்து

புலம்பல்.

மேற்படி தரு.

தங்கைவயிற் றினிற் றங்கிப் பிறந்தசெல்
வங்களா மாரத்தி னங்களா நீங்கள்வந்
திங்கன் மாண்டீரோ சுற்றமிரு
மெங்களை வேண்டீரோ

தந்தையுங்கள் சங்கதிகேட்
டெந்தவிதம் சிந்தைசகித்திருப்பார்

மண்ணுலகாசையை நண்ணுமலந்தமுக்
கண்ணனும்பங்கயக் கண்ணனும்வேண்டிட

விண்ணுலகம் புகுந்தீர் அதற்கென்றே
யெண்ணித் தவம்புரிந்தீர்

மைக்கண்மரு மக்களா
ஒக்கவுங்க ளுக்கு விதிவந்ததோ

வசனம்.

அடா ரத்தினங்காள் ? அரசன்புத்திரர்களாயுதித்தும் அவனி யாளாமல் விண்ணுலகாள நினைந்தீர்களா ? ஐயோஉலகத்தில்ஒருகுழ ந்தை பிறந்திறந்துபோய்விட்டால்சகிக்கவொண்ணு வருத்தம் கொள் கிறார்கள். நீங்கள் ஏழுபேரு மாண்டீர்களே உங்களுடைய தந்தை என்னவிதம் பிரலாபிக்கமாட்டார்? இப்படி மடிந்தீர்களே காசிபனுக் கு என்னபதில் சொல்வேன்.

(தானகத் தீர்மானித்தல்) சரி நாமும் இவர்களுட னிறந்துவிடு வதே உத்தமம், இந்த பாபத்தை என்னவிதம் பார்ப்பேன் இருக்கட் டும் நாமுமிறந்துவிட்டால் இவர்களை யாரெடுத் தடக்கம்பண்ணுவார் மேலும் மூளியையும் அவள் பந்துக்களையும் அடியோடு நாசமாக்கிவி ட்டுப் பின்னுல்தான் நாம் யோசனையை முடிக்கவேணும்.

ஆயர்காள் ? இறந்தது இறந்துவிட்டார்கள் இனிமேல் வரப் போகிறார்களா? இல்லை ஆனதால் இன்னும் கொஞ்சம் உதவிசெய்யு ங்கள்.

ஆயர்கள்—மகாராஜா என்னசெய்யவேணும்.

(ந-ம்) இவர்களை யெடுத்து நல்லடக்கம் செய்யவேணும்.

(ஆ-ம) அப்படியே செய்கிறோம் மகாராஜா

பொது.

ஆயர்கள் நல்லதங்கையையும் குழந்தைகளையும்

நல்லடக்கம் செய்தல்.

(ஆ-ம்) மகாராசா ? தங்களுத்தரவுபோல் செய்துவிட்டோம்.

நல்லண்ணன்.

ஏ ஆயர்காள் இந்தச் சங்கதிகளை நம்மூர்க்குள்ளாவது வேறே காட்டுகளிலாவது சொல்லாதீர்கள் அதோ தெரிகிற நகைகளை நீங்க ளெடுத்துக்கொள்ளுங்கள்

(ஆ-ம்)என்ன மகாராஜா ஒன்றையுங்காணோம் வெறுங்கல்லாக இருக்கிறது?

நல்லண்ணன் ஆலோசனே,

ஆ இதுவென்ன ஆச்சரியமா யிருக்கிறது நமது கண்ணிற்கு ஆபரணங்களாகத் தோற்றுகிறது, இவர்களுக்கு கல்லாகக் காணுகிறது மற்றோருக்குத் தெரியாது போகும்படி சபித்திருக்கிறாள் போலும் இருக்கட்டும் நாம் நினைத்த காரியத்தைப் பூர்த்திசெய்துகொள்வோம் (ஆபர்களைப் பார்த்து) நீங்கள் சம்மரண்மனைக்கு வாருங்கள்

(ஆ-ம்) உத்திரவு மாராஜா.

நல்லண்ணன் வீட்டிற்குவந்து அலங்காரி யோடு சந்தோஷம் பாராட்டல்.

(அலங்காரி-வசனம்) பிராணேசா ? போய்பார்த்தீர்களா?

(நல்லண்ணன்-வசனம்) சகி ! நான் வெகுதூரம் போய்ப் பார்த்தேன் அவளைக் காணவே காணோம்.

(அ-ரி-வ-ம்) அப்புறம் என்ன செய்கிறது ?

(ந-ண்-வ-ம்) போனுள்போகிறாள்.

(அ-ரி-வ-ம்) என்னமகாராஜ இப்படிச் சொல்லுகிறீர்கள் ?

(ந-ண்-வ-ம்) ஆம் நீ யிவ்வளவு உபகாரம் செய்தும் உன்னிடம் சொல்லாமலும் என்னிடம் சொல்லாமலும் போனாளே அப்பேர்ப்பட்டவளெப்படிபோனாலென்ன.

(அ-ரி-வ-ம்.)

நாதா யென்னை யேதோமெத்தவும் கோபித்துக்கொண்டீர்களே நானவளுக்கு எவ்வளவு செய்தேன் நீங்கள் அண்டைவீடு அயல்வீட்டுக்காரரைக் கேளுங்கள் விசுவாசமில்லாதவள்.

(ந-ண்-வ-ம்.)

சகி ? நீ செய்ததெல்லாம் அண்டைவீட்டுக்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

(அ-ரி-வ-ம்.)

(பதறி) என்னசொல்லி யிருக்கிறார்கள் ?

(க-ன்-வ-ம்.)

(வஞ்சகமாய்ச் சிரித்துக்கொண்டு) சகி ? நீயவளுக்கு நிரம்ப உபசாரனை செய்தாய் நீ சொல்லியும் களவாணித்தனமா யோடிவிட்டாளென்று தான் சொல்லிக்கொள்ளுகிறாகள்.

(அ-ரி-வ-ம்.)

பிராணேசா ? இங்கு வந்தவள் அண்ணன் வீடென்று கொஞ்சமும் பாராமல் ஆபரணங்களை யெடுத்துக்கொண்டுபோனவளை நீங்கள் போய்த் தேடினதே தப்பிதம்.

(ந-ன்-வ-ம்.)

உன்மீதுதான் தப்பிதம் ஏனென்றால் அப்பேர்பட்ட திருட்டுக் கழுதைஎப்பவந்ததோ அப்போதே நீ உஷாராயிருக்கவேண்டும் அஃதில்லாதபடி ஏமாந்தபுத்தியாயிருந்தால் அவள்சமயம்பார்த் தடித்துக் கொண்டுபோனாள் தொலைந்துபோகிறது விட்டுத்தள் வேறே பேசு.

(அ-ரி-வ-ம்.)

நாதா ! அவள்போகிறாளென் றிருந்தபோதிலும் என் ஆபரணங்கள் போய்விட்டதே யென்ற யேக்கம் பெரிதாயிருக்கிறது.

(ந-ன்-வ-ம்)

சகி ! மலைக்காதே என்னென்ன ஆபரணம் போய்விட்டது? சொல் உடனே செய்துவர உத்தரவளிக்கிறேன்.

(அ-ரி-வ-ம்.)

நாதா ! அந்தக் களவாணிச்சிறுக்கி வந்திருக்கும்போது முத்துமாலை, மோகனமாலை, அஸ்தகடகம், ரத்னமோதிரம், கொத்துச்சரப்பளி, கோதும்பைச்சரம், சந்திரஹாரம், தண்டைகொலுசு, வங்கிருடா, வச்சிரமுருகு, ஜிமிக்கி ஓலை, பேசரிகத்து, முத்து மூக்குத்தி, ரத்தினப்பதக்கம் முதலிய ஆபரணங்கள் தெரிந்தவரையிலும் போய்விட்டது நான் தூங்கினபிற்பாடு எதேது போனதோ? இப்படிவருமென்றறிந்தால் உள்ளே நுழையவிடுவேனோ? அப்படிக்கெல்லாமிருந்தால் இப்படிக்கேனிருக்கிறேனா ? என்னைப்போல் பைத்தியகாரி யாருண்டு ?

(க-ன்-வ-ம்.)

சகி ! விசனிக்காதே போனாற்போகட்டும் அதைப்போல் எவ்வளவோ ஆபரணம் செய்துதாக் காத்துக்கொண்டிருக்கிறேன் இனிமேலிப்படி ஏமாய்த்தனமா யிராதே.

(அ-ரி-வ-ம்)

நாதா! இனிமேலுந் தெரியாதா உங்களுடைய பந்துஜனங்களை ஒருக்காலும் நம்பவேமாட்டேன்.

நல்லண்ணன் தரு.

வாருமென்ற வுடனே ராவணசந்நியாசி என்றமெட்டு.

இராகம்—தேசிகதோடி—ஆதிதாளம்.

கண்ணிகள்.

மாதரசே நமது மைந்தன் றனக்குமண
மங்களஞ் செய்ய நினைந் தேனே
ஆதலா லுன் னுடைய அகத்திலினைப்பை வெளி
யாக்குவா யின் றுடனே தானே

வசனம்.

கண்மணீ! (நெருநெல் உளனொருவன் இன்றில்லை யென்னும் பெருமை யுடைத்திவ்வுலகு) யென்றிருப்பதால் நம் கண்ணுள்ளபோதே நம் மைந்தனுக்குக் கல்யாணம் செய்யவேணுமென்று நினைக்குறேன் உன்கருத்தையும் வெளியிடுவாயாக.

(அ-ரி-வ-ம்)

பிராணேசா! நாங்கள் சொல்வது உண்மைதான் தங்களெண்ணம்போல் செய்வதற்குத் தடையென்னக் காத்துக்கொண்டிருக்கிறேன்

நல்லண்ணன் தரு.

அப்படி யாகிலெந்த அரசன் மகளைமண
மாற்றலாங் கூறடி மாதே
இப்பொழுதேயதற்கு வேண்டுங் காரியங்களை
யெல்லாம் சேகரித்திடத் தோதே

வசனம்.

பெண்ணே! அப்படியானால் எந்த அரசன்மகளை விவாகம்செய்யலாம், அதுசொன்னால் அதற்கு வேண்டியகாரியாதி செய்ய நன்றாயிருக்கும்.

(அ-ரி-வ-ம்)

நாதா! யென் தகப்பனார்வீட்டை மறந்தீரோ சமையத்திற்குத் தகுந்தயோசனை போகிருப்போ விருக்கிறதே? என் சகோதரன் கே

நயராஜன் குமாரியிருக்க அவளை நினையாது வேறேயாரையாரையோ சொல்லுகின்றீரே என்ன ஞாயம்?

நல்லண்ணன் தரு.

தேடியபொருள்கையிற் சிக்கிய தென்றதுபோற்
சேர்ந்தது வந்து நல்ல காலம்
நாடியுன்மனம் போலச் செய்வோம் சகலருக்கும்
நாம்தெரிவிப்போ மனுகூலம்.

சகி! அப்படியாய் வித்தியாசம் நினைக்கவில்லை உன்மனம்போலவே உன் சகோதரனுடைய பெண்ணை மணமுடிப்போம் நான் மற்ற அரசர்கட்கு நிருபமெழுதித் தருவிக்கிறேன நீ உன்னுடைய தாய்தந்தையர்க்குக் கடிதமெழுது.

(அ-ரி-வ-ம்)

உத்திரப்படியே செய்கிறேன்.

(நன்-வ-ம்)

மந்திரி! நமது மைந்தனுக்குத் திருமணஞ் சூட்டுவதாய் சகல அரசர்கட்கும், நமது பந்துக்களுக்கு நல்லதங்காளும் குழந்தையுமிறந்ததாய் நிருபம் எழுதித் தருவியும்

(மந்திரி-வசனம்) அப்படியே யெழுதிவிட்டேன்.

கடிதங்கள்போய்ச் சேர்ந்தவுடன் அலங்காரி பந்து ஜனங்களும் சகல அரசரும் வருதல்.

(அலங்காரியின்-தம்பி-வசனம்.)

அக்காள்! வந்தனம்.

அலங்காரி—கல்யாண் தம்பி வருவாயாக.

மேற்படி எல்லவரும் வந்துவிட்டார்களா?

தம்பி—அக்கா! எல்லோரும் வருகிறார்கள்.

அலங்காரி—நாதா! நம் பந்துக்களெல்லாம் வந்துவிட்டார்கள் விவாகம் நடத்த தாமதமேன்?

நல்லண்ணன்—சகி! பதறாதே மந்திரி ராசாஸ்திரியை யழைக்கப் போயிருக்கிறார் வரட்டும்.

சிற்பசாஸ்திரி வசனம்—மகாராஜ்! வந்தனம்.

(ந-ன்-வ-ம் கல்யாண் சிற்பசாஸ்திரி! உன்னிதமான ஓர் மண்டபமேற் படுத்தி அதில் சூஸ்திரப்பந்தலிட்டு அதிலுள்ள யாவர்களும்மடி யும்படியான தந்திரயுக்திசெய்து காட்டுவாய்.

(சி-ரி-வ-ம்) பிரபு! தாங்கள்சொன்னபடியே முடித்தாய்விட்டது.

(ந-ன்-வ-ம்) சிற்பி! பேஷ்உள்ளேபோய் சன்மானம்வாங்கிக்கொள்

(சிற்பி) அப்படியே வாங்கிக்கொள்கிறேன்.

மகனுடைய கல்யாண வைபவம்.

(ந-ன்-வ-ம்) மந்திரீ வேதியரை யழையும்.

(வே-வ-ம்) மகாராஜ் இதோவந்து விட்டோம் ஆசீர்வாதம்வருகிறது

(ந-ன்-வ-ம்) குருநாதா வந்தனம்.

மேற்படி சுவாமி முகூர்த்தவேளை தவறாமல் நம் குமாரனுக்கு ம ணம் சூட்டவேண்டிய நல்லவேளை சகல காரியங்களும் தயா ராகிவிட்டது இதுநேரமோ பாருங்கள்.

மேதியர்—மாராஜ இதுதான் சரியான முகூர்த்தவேளை மாப்பிள்ளை யையும் பெண்ணையும் மணவரைக்கு அழையுங்கள்.

(ந-ன்-வ-ம்) மந்திரீ மாப்பிள்ளையும் பெண்ணும் வரச்செய்யும்.

(ம-ரி-வ-ம்) இதோ வந்துவிட்டார்கள்.

மாப்பிள்ளையும் பெண்ணும் மணவரையிலிருக்கும்
போது வேதியர்கள் சுலோகம் சொல்லி
மாங்கல்யம் சூட்டிவைத்தல்.

சுலோகம்.

சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப் புஜம்
பிரசன்ன வதனம் தியாயே
சர்வ விக்னோப சாந்தயே.

வேதியர்—மாராஜ் மங்களமாய் கல்யாணம் நிறைவேறிற்று எங்களுக் குப் பூரிதட்சணை கொடுங்கள்.

(ந-ன்-வ-ம்) மந்திரீ வேதியர்களுக்கு தாம்பூலதட்சணை சோமன்சோடு முதலானதும் கொடுத்தனுப்பும்.

(ம-ரி-வ-ம்) அப்படியே கொடுத்துவிட்டேன்.

நல்லண்ணன் பந்துஜனங்களை வேறாய் இருக்கச்
செய்துவிட்டு அலங்காரி தன்பந்து
ஜனங்களுக்கு விருந்திடல்.

(அ-ரி-வ-ம்) தம்பி! சாப்பிடவா அத்தான்! சாப்பிட வாருங்கள் மற்று முள்ளவரும் வாருங்கள்.

அலங்காரியின் பந்து ஜெனங்கள் சாப்பிடும்போது
பெண் மாப்பிள்ளை தவிற மற்றவரெல்லாம்
இறக்கும்படி சூஸ்திரப் பந்தலைத்தட்டி
விட எல்லோரும் மடிந்தவுடன்
அலங்காரி சொல்லல்.

ஆ தெய்வமே! என்ன காலம்? இது யார்செய்த வஞ்சகம்? இறந்துபோய் விட்டார்களே ஆசண்டாளா! இப்படியும் பெரும்மோசம் செய்யலாமா?

(ந-ன்-வ-ம்) அடி துஷ்டி! என்ன சொன்னாய்? வாயிப்படி நீ என்னுடைய தங்கையையும் குழந்தைகளையும் வந்தவிடத்தில் கொடுமைசெய்து விரட்டி படிதது இறக்கும்படி செய்தாயல்லவா? உன்னை இலேசாய் விட்டேனா?

கலித்துறை

என்னைத் திரணமு மெண்ணுமலென் றங்கை யென்மருகர்
தன்னைத் துரும்பாய் நினைத்தோட்டிக் கானசென் றுசாகச்செய்தாய்
என்னைக்கெடுத்துக் தலைமொட்டை யாக்கியுஞ் சீழித்தும்
உன்னைக்கழுதையின் மேலேற்றியூர் வழியோட்டுவனே.

நல்லண்ணனுக்கும் அலங்காரிக்கும்
தர்க்கம்.

இவளை மருமினுலென்சென்மம் என்றமெட்டு

இ-ம்—மோகனம்—அடதாளம்—சாப்பு.

கண்ணிகள்.

அடி—பட்டியே பாருனைப் பங்கம் செய்வேனே
பண்ணுமலே யொருக் காணும் விடேனே

கிட்டியே யுன்றலை மொட்டை யடிக்கிறேன்
கெருவமெல்லாந் தொலைந் தோடமுடிக்கிறேன்

அலங்காரி.

அந்தக்-களவாணியானுஞ் சக்களத்திதான் வந்து
கண்ட படிக்கெல்லாஞ் சொல்லியே தந்து
அளவிலாப் பந்துக்கள் யாவருஞ் சாகவே
யாற்றி வைத்தாயழைத் தேயிதற்காகவே

நல்லண்ணன்.

என்றன்-நேரிலே தூஷணை செய்யும் கிர்மூடி
நேரிழையை விட்டிருப் பாயோ போடி
பாரிலே யுனைப்போலே பார்த்திலேன் மூளியே
பாதகத்திற்குடன் பட்டசண்டாளியே

அலங்காரி.

நான்—விரும்பி யவளுக்கு மெத்தவு நன்மை
விளைத்ததினாலே கிடைத்ததித்தின்மை
கரும்புக் கொருமொழி வைக்காமற் பேசுறாய்
கண்மூடிக் கொண்டுநீ கத்தியே யேசுறாய்

வசனம்.

ஆ சண்டாளா! நீசெய்த சூதுகளை முன்னமே நான் தெரிந்திருந்தால் என் பந்துக்களை இந்தக்கட்டிடத்தில் வைத்து விருந்திடமாட்டேனே இப்படித் துரோகஞ்செய்தையே.

(ந-ன்-வ-ம்)

அடி சண்டாளி! விட்டேனு இன்னும்பார் அடா சேவகா அம்பட்டனை யழைத்துவா?

சேவகன்—மகாராஜ் இதோ வந்துவிட்டான்.

(ந-ன்-வ-ம்) அடா குடிமகனே இந்தப்பாவியைத் தலைமொட்டையடித்துவிடு.

அம்பட்டன்—மகாராஜ் இதோ யடித்துவிட்டேன்.

(ந-ன்-வ-ம்) அடா சேவகா ஏவலர்களை யழை.

(சேவகர்கள்) மகாராஜ் இதோ வந்துவிட்டார்.

(ந-ன்-வ-ம்) அடா ஏவலர்காள், இந்தப் பாதகியைக் கழுதைமேலேற்றித் தெருத்தெருவா யடித்துச் சுண்ணாம்புக்காளவாயில் போடுவதுடன் இவளைப்போலச் சிலைபடித்து நான்குதிசை

களிலேயும் நாட்டி வருகிறவர் போகிறவர்களைக்காரித் துப்பும்படி செய்யுங்கள்.

அலங்காரியை ஏவலர் சுண்ணாம்புக் காளவாயில் போடுதல்.

(ஏ-ர்-வ-ம்) மகாராஜ் தங்களுத்திரவுப்படி செய்துவிட்டோம்.

(ந-ன்-வ-ம்) சந்தோஷம். ஏவலர்காள், இந்த பிணக்குவியல்களை வண்டியிலேற்றி வைகை யாற்றிற் கொண்டுபோய் போடுங்கள்.

(ஏ-ர்-வ-ம்) உத்திரவு மகாராஜ்.

காசிபன் பஞ்சம் தெளிந்தவுடன் தன் சம்சாரத்தையும் குழந்தைகளையும் கூட்டிக்கொண்டுபோக மதுரைக்கு வருதல்.

வசனம்.

மந்திரி நமது நாட்டில் பஞ்சமுறவும், அதனாலென் பாரியையும் குழந்தைகளையும் பிரிந்து இந்நாள்வரை யிருக்கும்படி நேரிட்டது இப்பொழுது பஞ்சம் தெளிந்துவிட்டமையால் யான்சென்றழைத்துக் கொண்டு வருகிறேன் அதுவரை இராச்சியத்தைப் பார்த்துக்கொள்ளும்.

மந்திரி வசனம்.

உத்திரவுப்படி செய்கிறேன் தாங்கள் சென்று சீக்கிரம் அழைத்து வாருங்கள்.

காசிபன் மதுரைக்குவந்தவுடன் நல்லண்ணன் தங்கை இறந்த துக்கத்தால் எதிர்சென்றழையாமலும் வரவேற்காமலும் விசனமாயிருந்த தால் காசிபன் நல்லண்ணனை பார்த்துச் சொல்லுதல்.

பேசாம லிருப்பதென்ன பெருமையோடி பெண்ணே என்றமெட்டு.

இராகம்—எதுகுலகாம்போதி—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

மைத்துனரே பேசாமல் மவுனமுற்றல் நன்றோ
உத்திர விலலாயல்வந்த உயர்விலாதா னென்றோ என்றன் (௧௰)

நல்லண்ணன்.

அல்ல அல்ல யோசனையா யானிருந்த தாலே
நல்வாவு கூறுதற்கு நானயர்ந்தே னேர்காலே பொய் (அல்)

காசிபன்.

பெண்டு நல்ல தங்கையுடன் பிள்ளைகளும் சுகமாக
உண்டெனின் மனங்களிக்க வுரைத்திடும் ஞாபகமா என்றன் (ஐ)

நல்லண்ணன்.

நாசமுறு காலமதால் நல்லதங்கை யாளும்
மாசிறுவரெழுவர்களு மடிந்தனரே கேளும் பொய் (அல்ல)

காசிபன்—என்னசொல்கிறீர்?

நல்லண்ணன்—இறந்துபோய்விட்டாள்.

காசிபன்—யார்?

நல்லண்ணன்—என் தங்கையும் உமது மனைவியுமாகிய நல்லதங்கை ஏழுபிள்ளைகளுடன் காட்டில் கிணற்றிலே வீழ்ந்திறந்து விட்டாள்.

காசிபன் துக்கம்.

விருத்தம்.

ஐயையோநல்லதங்கா அருமைக்காதலியேயிந்த
வையகத்தாசைநீங்கி மணமகன்வாஞ்சைவிட்டு
செய்யவாய்க்குதல்வார்த்தை சேயர்களெழுவரோடு
பையரவணியுமீசன் பதமதைச்சேர்ந்திட்டாயோ

வசனம்.

ஆ என்னருமைக்காதலீ? கண்மணீ? கற்புக்கரசே? நங்கையர் நாயகமே? என் குலவிளக்கே? இதற்கா வேண்டாம் வேண்டாமென்ன பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு தமையன் வீடுவந்து சேர்ந்தாய்? வரும்போதே தடுத்தேனே சொல்லியும் கேட்டாயில்லை கேடுவரும் பின்னே மதிகெட்டுவரு முன்னே, என்ற பழமொழியை நிலை நிறுத்தினையே. ஐயோ? இது யார்செய்த சதியோ இனியென் செய்குவேன்.

நல்லண்ணன் தேற்றுதல்.

மைத்துனரே? விசனப்படாதீர் இனிமே லாவதென்ன? நம் செயலல்ல எல்லாம் ஈசன்செயல்.

விருத்தம்.

சந்திரசூடனூனந்தனதுக்கோர் கண்ணூனந்தருவினீமுன்
இந்திரற்கோபகக்குறிபா யியமனுக்கோபுழுக்காலாமிரவியின்ற
மைந்தனுக்கோகான்முடமாம் வனசனுக்கோர் தலைகுறைபாம்வரலாறி
தேல், பந்தமுள மானிடரைவிதிவிடுமோ ஆலவாய்ப்பதியுளாலே.

வசனம்.

என்றபடியால் திரிமூர்த்திகளையும் மற்றைய தேவர்களையும்விதி யானது விடாதென்றால் கேவலம் நாமெல்லாம் எந்தமட்டு விசனப்படாதீர் அவளுக்கும் குழந்தைகளுக்கும் லபி அவளவுதான் ஆவதென்ன? தேறியிரும்.

காசிபன்

மைத்துனரே? உமது தங்கை என்னவிதமா யிறந்துவிட்டாள்.

நல்லண்ணன்.

தங்கை வரும்போது நான் காட்டில் வேட்டையாடிக்கொண்டிருந்தேன் அப்போது சந்தித்துப்பசி வீட்டிற்கனுப்பிவைத்தேன்வீட்டில் வந்தவுடன் என்றேவி பொல்லாதமூளி வாவென்று கேளாமலும் வந்தவளுக்குபசாரஞ்செய்யாமல் கொடுமைசெய்ததால் கோபமாய் குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு யான்வருவதற்கு முன்னமேகாட்டிற்குச்சென்று பாழுங்கிணற்றில் மைந்தர்களையுந் தள்ளித் தானும் விழுந்திறந்துவிட்டாள். வந்தவுடன் விசாரித்து மூளியையும் அவள்பந்துக்களையும் அடியோடு நாசம்பண்ணி செய்பாத அவமானம் செய்து பழிக்குப்பழி வாங்கிவிட்டேன்.

காசிபன்.

மைத்துனரே? என்றேவியுங் குழந்தைகளும் இறந்த இடத்தையாவது காண்பியும் அவளைப் பார்க்காவிடினும் அவ்விடத்தையாவது பார்க்கிறேன்.

நல்லண்ணன்.

வாரும் அவ்விடத்தைக் காண்பிக்கிறேன்.

நல்லண்ணன் காசிபனை யழைத்துக்கொண்டு வந்து நல்லதங்காளும் குழந்தைகளும் இறந்த இடத்தைக் காண்பிக்கக் காசிபன் துயரமுறுதல்.

ஐயோ கண்மணீ? நீ யிவ்விடத்திற்றானு மடிந்தனை? நீயெவ்வுலகஞ் சென்றிருக்கிறாய்? இப்படிச்செய்தற் கெத்தனைநாள் காத்துக் கொண்டிருந்தாய்? யினி உன்னைப்பறிகொடுத் தரைட்சணமேனு முயிர்தரியேன் இதோ யானும் குத்திக்கொண்டு சுவர்க்கமடைகிறேன்.

நல்லண்ணன்.

ஆ சிவமே? இதுவும் நின்சோதனையோ? என் தங்கையும் குழந்தை எழுவரும், மைத்துனரும், இறந்தபின்னர் யான்மட்டும் ஜீவித்திருக்க வேண்டுமோ? இதோ யானும் இறக்கிறேன்.

பரமசிவன் வசனம்.

ஏ உத்தம புருஷா! உன்னைப்போன்ற விசுவாசமுள்ள பத்திமானைப் பார்த்ததில்லை. கொலைசெய்துகொள்ளவேண்டாம் சற்று நில் இதோ மகா பதிவிரதா சிரோன்மணியையும், அவள் குழந்தைகளையும் அவள் நாயகனையு முயிர்த் தெழும்படி செய்கிறேன் பொறுத்துக் கொள்.

நல்லண்ணன்.

ஆ ஆ! என்ன ஓர்விதமான அசரீரி வாக்குண்டாகிறது சற்று கவனிப்போம்.

பரமசிவன் பிரசன்னமாய் இறந்தவர்களை உயிர்த்தெழச் செய்தவுடன் காசிபன், நல்லதங்கை, நல்லண்ணன் முதலியோர் துதித்தல்.

போற்றி விருத்தம்.

கங்கையைச் சடையில்வைத்த கண்ணுதற் கடலே போற்றி
மங்கையோர் பாகம் வைத்த மறைபுகழரசே போற்றி
செங்கையிற் சூலமேந்துந் திரிபுரதகனா போற்றி
எங்களை யடிமை கொண்ட விறைவனே போற்றி போற்றி.

காசிபன்—கண்ணுதற் கடவுளே! வந்தனம்.

பரமசிவம்—கல்யாண பாலகா! அருகினில் வா.

நல்லதங்கை—உமாபதியே! அடியாள் வந்தனம்.

பரமசிவம்—கல்யாண் குலசேகரி! நீ தீர்க்க சுமங்கலியாய் வாழ்ந்து முடிவில் பத்தாவும் நீயும் எனது பதமடைவீர்களாக.

நல்ல தங்கை—தாணுவே! தங்க ளாஞ்ஞைப்படி

பரமசிவம்.

ஏ குலசேகரி! இவ்வுலகத்தார் ஒரு தெய்வமாக வைத்து வணங்கவும் வரமளித்தோம் ஏ நல்லண்ணா! நீமதுரையை யரசுசெய்து முடிவில் பதமடைவாயாக.

நல்லண்ணன்—கடவுளே உத்திரவு.

சுபம்—சுபம்—சுபம்.

வாழிவிருத்தம்.

காவலனு நல்லண்ணன் காசிபனென்னும் வேந்தன்
மாவல நல்லதங்கை மைந்தர்க ளெழுவரித்தை
யாவலாய்ப் படித்தோர் கேட்டோராடினோ ராடச்செய்தோர்
பூவுலகதி லென்னாளும் புகழ்பெற வாழிமாதே.

நற்குலசேகரி என்னும்

நல்லதங்காள் சரித்திரம்

முற்றுப்பெற்றது.

சுபம்.

892
1067

அநுபவமானது!! பிரசித்தியடைந்தது!! சஞ்சீவிபோன்றது!!

அயக்காந்த திராவகம்.

மித்திரர்களே! இந்த அபூர்வமருந்தானது அநேக கொடியவியாதிகளை ஆச்சரியமாய் கண்டிக்கக்கூடியது இதை அனேக ஆயிரங்களுக்கு மேல் ஜனங்கள் உபயோகித்து சந்தோஷித்திருக்கிறனர். வியாதியினாலாவது மிகுந்த சுகானந்தத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகங்களை பலப்படுத்தி பலவீனத்தை கருவறுக்க இது நிகரற்ற மருந்தாகும். ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து சாப்பிடுவதற்கும் மிக இன்பமாயிருக்கும். இநமவநோய்களுடை அவஸ்தைப்படுவோர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தையடைவார்கள். இது குணம் தீரக்கூடிய அநேகவியாதிகளில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.

காமாந்தகாமினைக் கறைப்பார்க்கும் உஷ்ணத்தினாலாவது புழுவெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும். நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல் கைகால் காந்தல் இவை தீரும். முகவசீகரத்தை உண்டாக்கும், தேக அசதியைப் போக்கும் ஜீரணசக்தியையும் நல்ல பசியையும் உண்டாக்கும் மனதை அதிக உற்சாகப்படுத்தும். நரம்புகளுக்கு அதிக வலுவைத் தரும், தேகத்திற்கு நல்ல இரத்தத்தைச் சுரப்பிக்கும். சுகபோகத்தை க்ஷணத்தில் நீக்கும், வாதபித்த சிலேத்துமத்தால் உண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும் சத்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத் தரும் மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் இவை தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 20-நாள் சாப்பிட்டால் இணையில்லாத ஆனந்தத்தைத் தரும் இழந்துபோன தேகதிடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறுமருந்தே கிடையாது. 40-நாள் மருந்துட்கொள்ளும் பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது தேகம் வஜ்ஜிரமேயாகும். இதற்கு யாதொரு பத்தியமுங் கிடையாது.

இந்த திராவகத்தை உட்கொள்ளவேண்டிய முறை.

அரிக்கால் ஆழாக்கு சுத்தஜலத்தில் திராவகத்தை 5-துளி அல்லது 7-துளி அதில்விட்டுக் கலக்கிக் குடித்துவிடவேண்டும். பத்தியமே கிடையாது இதைப்பற்றிய விவரங்கள் பார்சலோடு வைத்து வரும்.

அரைமண்டலம் 20-நாளைக்கு வரக்கூடிய ஒருபுட்டியின் விலை
ரூபா 1 4 0 டஜன் 1-க்கு ரூபா—12.

ஒரு மண்டலம் 40-நாளைக்கு வரக்கூடிய ஒருபுட்டியின் விலை
ரூபா 2 0 0. டஜன் 1-க்கு ரூபா—21.

இப்படிக்கு,

பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்,
ராயப்பூர் பார்சல் போஸ்டு, மதராஸ்.